இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 131 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 06 – ஞாயிற்றுக்கிழமை 21 டிசம்பர் 2025 – கோவை ★★ 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 131: Thiruvalluvar Year - 2056 - Margazhi 06 - Sunday 21 December 2025 - Kovai ★★ 28 Pages ₹ 5.00


## கொள்கை உறுதியும் கனிவும் நிறைந்த பேராசிரியர் பெருந்தகை ஊட்டிய



# திராவிட இனமான உணர்வோடு முன்செல்கிறேன்! கழகத்தின் தொடர் வெற்றிகளை அஞ்சலியாக உரித்தாக்குகிறேன்!

### இனமானப் பேராசிரியர் பிறந்தநாளில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



**சென்னை, டிச. 21-**

**இனமானப் பேராசிரியர் அவர்களின் 103வது பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "கொள்கை உறுதியும் கனிவும் நிறைந்த பேராசிரியர் பெருந்தகை ஊட்டிய திராவிட இனமான உணர்வோடு முன்செல்கிறேன், கழகத்தின் தொடர் வெற்றிகளையே அவருக்கு என் அஞ்சலியாக உரித்தாக்குகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

கழகம் எனும் கலத்தைப் புயல்கள் தாக்கிய போதெல்லாம் தலைவர் கலைஞரின் பக்கத் துணையாய் நின்று கரைநோக்கிச் செலுத்திய பேராசிரியர் பெருந்தகையின் பிறந்தநாள்!

என்னை வளர்த்தெடுத்த கொள்கை ஆசான்களில் ஒருவர். நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு புதிய உயரங்களை அடையும் ஒவ்வொரு தருணத்திலும் அவரது நினைவு என்னை ஆட்கொள்ளத் தவறியதில்லை.

கொள்கை உறுதியும் கனிவும் நிறைந்த பேராசிரியர் பெருந்தகை ஊட்டிய திராவிட இனமான உணர்வோடு முன்செல்கிறேன், கழகத்தின் தொடர் வெற்றிகளையே அவருக்கு என் அஞ்சலியாக உரித்தாக்குகிறேன்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கிராமங்களின் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்த - மகாத்மா காந்தி

# 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை ஒரே இரவில் அழித்த மோடி அரசு!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடும் குற்றச்சாட்டு!



**புதுடெல்லி, டிச.21-**

**கிராமங்களின் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்த, 20 ஆண்டு கால மகாத்மா காந்தி 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை மோடி அரசு ஒரே இரவில் அடியோடு அழித்து விட்டதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.**

VB-G RAM G திட்டம் என்பது 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின் மறுசீரமைப்பு அல்ல, மாறாக கிராமப்புற வேலை வாய்ப்புகளை அழிக்கும் திட்டம் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார். மாநிலங்களுக்கும், கிராமங்களுக்கும் எதிராக புதிய திட்டம் கொண்டுவரப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

100 நாள் வேலை திட்டம் கிராமப்புற தொழிலாளர்களுக்கு உரிமைகளை வழங்கியதுடன், நெருக்கடி சூழலில் நடக்கும் இடப்பெயர்வுகளை குறைத்ததாகவும் சுட்டிக்காட்டினார். கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்தும் இத்திட்டத்தை சிதைக்கவே ஒன்றிய பாஜக அரசு விரும்புவதாக ராகுல் காந்தி கூறியுள்ளார்.

கொரோனா காலகட்டத்தில் பொருளாதாரம் முடங்கி, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருந்தபோது, கோடிக்கணக்கான மக்களை பசியில் இருந்து பாதுகாத்ததுடன், கடனில் மூழ்கும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய திட்டம்தான் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் என்பதை அவர் நினைவு கூர்ந்தார்.

இத்திட்டத்தின் மூலம் பெரிதும் பயனடைந்த பெண்கள், பட்டியலின, பழங்குடியின மக்கள், நிலமற்ற தொழிலாளர்கள், ஏழை மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதையும், அவர்கள் அதிகாரத்தை அடையவதையும் ஒன்றிய பாஜக அரசு திட்டமிட்டு தடுப்பதாக ராகுல்காந்தி குற்றம்சாட்டியுள்ளார். கிராமப்புற மக்களின் பாதுகாப்பு அரணாக திகழும், மகாத்மா காந்தி 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மாநிலங்களுடன் ஒன்றிணைந்து நாடு தழுவிய அளவில் முன்னெடுப்புகள் நிச்சயம் எடுக்கப்படும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உறுதியளித்துள்ளார்.


